# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 227 ஆங்கீரச ஆனி 2/ (2[illegible]. 07 1992) சனி


## விமானப்படை சடலங்கள் இப்படியும் ஓர் அறிவிப்பு!

கடந்த ஞாயிறு விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 விமானத்திலிருந்து கொல்லப்பட்ட 6 விமானப்படை அதிகாரிகளினதும் உடல்கள் பலாலி இராணுவத்தளத்தில் வைக்கப்பட்டுள்ளதாம். இவ்வாறு நேற்று அறிவித்தது பாதுகாப்பு அமைச்சு. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அதிலிருந்த 19 விமானப்படையினரும் விமானத்துடன் வெடித்து சிதறியதில் சடலங்கள் ஏதும் மீட்கப்படவில்லை என்பதும் புலிகள் மீட்ட ஒரு விமானியின் சடலம் கூட கை, கால்கள் இல்லாது கருகிய முண்டமாக

= 04ஆம் பக்கம் பார்க்க

# கந்தளாயில் ரோந்து அணி மீது அதிரடித் தாக்கு, 18 படையினர் பலி

## இயக்கச்சி மோதலில் 20படையினர் பலி; 35பேர் காயம்

இயக்கச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் 20 படையினர் பலியானதாக ரூபவாஹினி நேற்று மாலை அறிவித்தது.

இயக்கச்சியில் மேலும் 35 படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டை ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் ரூபவாஹினி குறிப்பிட்டது.

## வீரவேங்கைகளுக்கு பொதுமக்கள் அஞ்சலி

நேற்று முன்தினம் வாடியடிப் பகுதியில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த வீரவேங்கைகளின் புகழுடல்கள் நேற்று பிற்பகல் 3 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளவில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டன.

பெருந்தொகையான மக்கள் இந்த வீரவேங்கைகளுக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

அஞ்சலிக் கூட்டம் நடைபெற்ற பின்னர் மாவீரர்களின் புகழுடல் பாண்ட் வாத்திய அச்சேரியுடன் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. 47

## இயக்கச்சிப்பகுதியில் இருந்து முற்றாக மக்கள் இடம்பெயர்வு

இயக்கச்சி இராணுவ நடவடிக்கையால் கோயில் வயல் சங்கத்தார்வயல் சோரன்பற்று மாசார் காரையம்பிட்டி போன்ற இடங்களில் இருந்து சகலரும் இடம்பெயர்ந்து வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளுக்கு சென்றுள்ளனர்.

இவர்களில் சமார் நூறு குடும்பங்கள் வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன் பற்று நாகர்கோயில் ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கு இப்பகுதி தொண்டர் நிறுவனங்களும் உதவி அரச அதிபரும் நிவாரணப் பணிகளைச் செய்து வருகின்றனர். 24

## அகதி முகாம்கள் மீது மும்முனைத் தாக்குதல்

செம்பியன் பற்று பகுதியில் உள்ள அகதி முகாம்கள் மீது கடந்த புதன்கிழமை ஹெலிக்கப்டர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தின.

இதேபோல கடற்படை கப்பல்களும் இம்முகாம்களை நோக்கி தாக்குதல் நடத்துகின்றன.

வெற்றிலைக்கேணி முகாமில் இருந்தும் அடிக்கடி இப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 24

## வடமராட்சி கடற் பகுதியில் கடற்படைக் கப்பல்கள்

குடத்தனை, மணற்காட்டுப் பகுதியில் கடற்படைக் கப்பல்கள் கரையோரப் பகுதியில் நடமாடித்திரிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அம்மன் கோட்டேஜ் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரை கடற்படையினர் பிடித்து பின்னர் விடுவித்ததாகவும் தெரியவருகின்றது. இந் நடவடிக்கை காரணமாக கரையோரப் பகுதி மக்கள் மிகவும் பீதியுடன் வாழ்கின்றனர். 24

## இருவர் பலி

மட்டக்களப்பு சாகிகாலை படையினர் கடந்த செவ்வாய் அன்று ஆலங்குளம் தமிழ்க்கிராமத்தை சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் 2 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 6 பேர் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

## போராளிகள் நினைவாக நடந்த வெற்றிகரத் தாக்குதல்

திருகோணமலையில் நேற்று இராணுவரோந்து அணி மீது புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் 18 படையினர் பலியாகினர் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கடந்த மாதம் வீரச்சாவு அடைந்த போராளிகள் நினைவாக நடத்தப்பட்ட இந்ததாக்குதலில் புலிகள்தரப்பில்சேதம் ஏதும் ஏற்படவில்லை

நேற்றுக்காலை 7 மணியளவில் கந்தளாய் றேடியோ சிலோன் முகாமிலிருந்து படையினரின் ரோந்து அணி ஒன்று வாழமடு முகாமிற்கு கால்நடையாக சென்றது

படையினரின்ரோந்து அணியை கந்தளாய் றேடியோ சிலோன் முகாமின் 200 யார் தூரத்தில் வைத்து புலிகள் எதிர்கொண்டு திடீர் அதிரடி ஒன்றை மேற்கொண்டனர்.

12 நிமிடங்களே நீடித்த இத்தாக்குதலில் 18 படையினரும் ஸ்தலத்தில் பலியாக ஏனையோர் முகாமிற்குதிரும்பியோடினர்.

இச்சமயத்தில் படையினருக்கு உதவ வாழைமடு முகாமிலிருந்து வந்த படையினரும் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி திருமலை மஹிந்தபுரத்தில் படையினருடன மோதலில் வீரச்சாவு எய்திய 7 போராளி

...04ஆம் பக்கம் பார்க்க

## கந்தளாயில் கைப்பற்றிய ஆயுதங்கள்

திருமலையில் நேற்று நடைபெற்ற அதிரடித் தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்,

- ★ ஏ கே எல் எம் ஜி - 02
- ★ ட்ரம் மகஸீன்கள் - 10
- ★ லிங்குகள் - 910
- ★ ரி - 56 துப்பாக்கிகள் - 16
- ★ மகஸீன்கள் - 57
- ★ கேசுஸரிகள - 15
- ★ ஐ எம் ரவைகள் - 1862
- ★ ஜெ ஆர் குண்டுகள் - 02
- ★ நிலக்கண்ணி அகற்றி - 01
- ★ இராணுவ தொப்பிகள் - 13
- ★ 12 சோடி சப்பாத்துகள்
- ★ மழைக்கவசம் - 01

## வளலாய் காவலரண்கள் மீது அதிகாலையில் தாக்குதல்

பலாலி இராணுவத்தினரின் வளலாய பகுதி காவலரண்கள் இரண்டின் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலை 3.30 மணியளவில் புலிகள் மேற்கொண்ட இந்த அதிரடியில் 3 படையினர் பலியாகினர் 10 நிமிடம் வரையில் நடைபெற்ற இத்தாக்குதலில் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்

- ஆர். பி. ஜி - 01
- ஜி 3 ஏ - 3 துப்பாக்கி - 01
- ரி - 81 துப்பாக்கிகள் - 02
- இதற்கான மகஸீன் - 02
- ட்ரம் மகஸீன் - 04
- ஐ. எம் ரவைகள் - 165
- லிங் - 125
- நேசட்டோ ரவைகள் - 10
- ஒரு சோடி சப்பாத்து

இந்த அதிரடியின் போது புலிகள் தரப்பில் கப்டன்

...04ஆம் பக்கம் பார்க்க

## லண்டன் சீக்கிய அமைப்பு சிவராசனுக்கு நன்கொடை

ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் தணுவுக்கும் சிவராசனுக்கும் லண்டனில் உள்ள சீக்கிய அமைப்பு ஒன்று 5 லட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளது.

இடுப்பில் வெடிகுண்டை கட்டி வந்து குண்டு வெடிப்பால் கொல்லப்பட்ட தணுவுக்கும் தற்கொலை செய்து கொண்ட சிவராசனுக்கும் அளிக்கப்படும் இந்த நன்கொடை இவர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் என சீக் பிறதர்கூட் எனும் சீக்கிய அமைப்பு அறிவித்துள்ளது

லண்டனில் பேர்மிங்ஹாம் பகுதியில் அமைந்துள்ள இந்த சீக்கிய அமைப்பு நன்கொடை வழங்குமாறு கோரி தான் வெளியிடும் செய்திப்பத்திரிகையில் முழுபக்க விளம்பரம் ஒன்றை வெளியிட்டது. இதன் மூலமே இந்த 5 லட்சம் ரூபா வசூலானது.

## வீரச்சாவு

பலாலி இராணுவத்தினருடன் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் நடைபெற்ற மோதல் ஒன்றில் அருள்நம்பி (ம. ஜோசன் பாசையூர்) வீரச்சாவு எய்தினார்.

மட்டக்களப்பு வெல்லாவெளி சேனையில் படையினருடனான மோதலில் காயமடைந்திருந்த லெப். (செ. பாலச்சந்திரன் மட்டக்களப்பு) நேற்று முன்தினம் வீரச்சாவு எய்தினார்.

## இயக்கச்சி மோதலில் மேஜர் அசோகன் வீரச்சாவு

நேற்று இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணியின் சிறப்புத் தளபதியான மேஜர் அசோகன் (இன்னி) (கந்தசாமி துரை ரவீந்திரன் வல்வெட்டித்துறை) வீரச்சாவு அடைந்தார் இதே பகுதியில் நடைபெற்ற மோதலில் கலைக்கோன் அப்புத்துறை பிரபாகரன் நீர்வேலி என்ற போராளியும் வீரச்சாவு எய்தினார்.

## சிறுவிளம்பரம்

**O/L கணிதம்**

92 பரீட்சையில் CREDIT பெறுபேறுடைய B.Sc (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி 07028

**சோதிடம்**

கல்வி, விவாகம் தொழில் தடைகள் நீங்க, தீராத நோய், கஷ்டம், குடும்பப் பிரச்சினைகள் தீர அதிர்ஷ்டம் அழைக்கிறது. பலன் தவறினால் பணம் திருப்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மானவ நாயகர் சோதிட நிலையம், (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். 07025

# காணாமற்போன ரஷ்ய அதிகாரி
## ஹிமாச்சல் பிரதேசத்தில் கண்டுபிடிப்பு

புதுடில்லியில் காணாமற்போன ரஷ்ய தூதரக அதிகாரி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் ஹிமாச்சல் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரை டில்லிக்குத் திருப்புமாறு வற்புறுத்துவதற்காக இந்திய பொலிஸ் குழுவொன்றுடன் ரஷ்ய தூதரகத்தின் மற்றொரு அதிகாரியும் ஹிமாச்சல் பிரதேசத்திற்குச் சென்றுள்ளார்.

இந்திய அரசுக்கெதிரான தீவிரவாதிகளினால் இவர் கடத்தப்பட்டிருக்கலாமென முன்னர் சந்தேகிக்கப்பட்டது. ஆனால் இவரது திடீர் மறைவுக்கும் தீவிரவாதிகளுக்கும் சம்பந்தமில்லை என தற்பொழுது கருதப்படுகின்றது.

ரஷ்ய அதிகாரி புதுடில்லியை விட்டு தானாகவே வெளியேறியிருந்ததாகவும், சொந்த மற்றும் அலுவலகப் பணி காரணமாக அவருக்கு ஏற்பட்ட உளவியல் தாக்கமே இதற்குக் காரணமாக இருந்திருக்கலாமெனவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

# செயற்கை அவயவ தொழிலகத்துக்கு உதவி கோரப்படுகிறது

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் இயங்கிவரும் ஜெய்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை ஊனமுற்றோருக்காக தொடர்ந்து இயங்கி வருவதாக தொழிற்சாலையின் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இத் தொழிற்சாலையில் ஊனமுற்றோருக்காக சில தயாரிப்பு வேலைகள் இடம்பெறுகின்றன.

இவை வளர்ச்சியுற பொது மக்களும், ஊனமுற்றோரில் அக்கறை உள்ளவர்களும் தொடர்ந்தும் தம்மாலான பங்களிப்பை செலுத்த வேண்டியது அவசியம் எனவும் இத் தொழிற்சாலையின் பொறுப்பாளர் தெரிவித்தார். (15)

# தடகள போட்டி நடைபெறும்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 1992 ஆம் ஆண்டிற்கான தடகள போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில், இன்று சனிக்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் ஹெக்டர் போசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்டத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சேவராஜன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். 16

# இந்திய பாராளுமன்றத்தின் இருசபைகளும் ஒத்திவைப்பு!

அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பகுதியில் பாபர் மசூதியை இடித்து அங்கும் இராமர் கோவில் கட்டும் முயற்சிக்கு அமைய கட்டுமானப்பணிகள் சில ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் நேற்று முன்தினம் பெரும் பரபரப்புநிலை ஏற்பட்டது.

இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளும் இத்தகவலையடுத்து திடீரென ஒத்திவைக்கப்பட்டன.

லோக்சபா, ராஜ்யசபா ஆகிய இரு சபைகளிலும் அப்போது பல முக்கிய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இரு சபைகளிலும் உடனடியாக இவ் விவகாரம் விவாதிக்கப்படவேண்டுமென எதிரணியினர் கூக்குரலிட்டதனாலேயே அவை ஒத்திவைக்கப்பட்டன.

# அன்னைதிரேசாவுக்கு யுனஸ்கோவின் 60 ஆயிரம் டொலர் பரிசு



அன்னை திரேசாவுக்குப் பன்னிரண்டாவது யுனெஸ்கோ கல்வி சமாதானப் பரிசு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வறிய மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும், சமாதானத்தை வளர்ப்பதற்காகவும் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிக்கும் அன்னை திரேசாவுக்கு 60 ஆயிரம் டொலர் பரிசு வழங்கப்படுவதாக யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்தது.

அன்னை திரேசா 1979 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

அக்டோபர் மாதம் 22 ஆம் திகதி பாரிசில் நடைபெறவுள்ள வைபவமொன்றில் பரிசுப் பணத்தை அன்னை திரேசாவுக்கு யுனெஸ்கோ நிறுவனப் பணிப்பாளர் வழங்குவார்.

# சாயிசமித்தியின் வெள்ளிவிழா

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியின் வெள்ளிவிழா 11 ஆம் 12 ஆம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் உள்ள சமித்தியில் சிறப்புற நடைபெறவுள்ளது.

# 3000 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனைகள்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுப்போட்டிகளில் ஓர் அங்கமாக நடைபெற்று வரும் தடகளப் போட்டித் தொடரில் நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தை குருநகர் விளையாட்டுக்கழக வீராங்கனை செல்வி எஸ். மூன்றாம் இடத்தை முறையே சென் நீக்கிலஸ் வீராங்கனை செல்வி மஞ்சுளாவும் சென் அந்தனீஸ் வீராங்கனை செல்வி பிரேமா பிரிந்தாவும் பெற்றனர்.

ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தை யுத்தாமல் வீரன் ஏ. டேவிட்டும், இரண்டாம் மூன்றாம் இடங்களை சென் அந்தனீஸ் அணி வீரன் எம். அருள்நாயகம் யுத்தாமல் கழக வீரன் எம் டொனால்ட் நிசாந்தையும், ஆகியோரும் பெற்றனர் (16)

# இராணுவ நடவடிக்கைக்கு காலக்கெடு இல்லையாம்

வடக்கு கிழக்கில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையை முடிப்பதற்கு காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லையென அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், முப்படைத் தலைமையகப் பேச்சாளர் சேனக சரத் முனசிங்கவும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தனர்.

செப்டெம்பர் 30 ஆம் திகதிக்குள் இராணுவ நடவடிக்கைகளை வடக்குக் கிழக்கில் முடித்துக்கொள்ள வேண்டுமென இராணுவத்தை அரசு பணித்துள்ளதாக வெளியான தகவல்களையும் அவர்கள் மறுத்தனர்.

## சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்
## Saiva Siddhanta Study Circle

## 3ம் ஆண்டு நிறைவு விழா
## கருத்தரங்கு

தலைமை: திருமதி அருள்நங்கை B A (Hons) (இந்து நாகரிகம்)

ஆய்வுரை: பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள் (Dr, Dr, Vid Pulavar)

★ இந்து தத்துவத்தில் சைவசித்தாந்தம்
★ பொது நலப்பண்பே சைவ சித்தாந்தத்தின் உயிர் மூச்சு
★ சைவ சித்தாந்தமும் அண்மைக்கால ஆய்வுகளும்

காலம்; 12-07-1992 (ஞாயிறு) காலை 9.30 மணி

இடம்; நாவலர் மண்டபம் (நாவலர் வீதி, யாழ்.)

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
238, பிரதான வீதி, யாழ். பொதுச் செயலாளர்
07013

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## மகாபொல கொடுப்பனவு -7-ம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது

**முதலாம் வருடம்**

| பீடம் / பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 13.07.92 | 9 00 — 12 00 மு.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 16 07 92 | 9 00 — 12.00 மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 20 07.92 | 9 00 — 12 00 மு.ப |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | | |
| விவசாய பீடம் | | |

**இரண்டாம் வருடம்**

| பீடம் / பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் | 13 07 92 | 1 30 — 3 0 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 16 07 92 | 1 30 — 3 00 பி.ப |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 20.07 92 | 1 30 — 3.00 பி.ப |
| விவசாய பீடம் | | |

**மூன்றாம் வருடம்**

| பீடம் / பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவ பீடம் | | |
| கலைப் பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 15 07 92 | 9 00 — 12 00 மு.ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 17 07 92 | 9 00 — 12.00 மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 21.07.92 | 9.00 — 12.00 மு.ப |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | | |

**நான்காம் வருடம்**

| பீடம் / பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| மருத்துவபீடம் (4,5 ஆம் வருடங்கள் | | |
| கலைப் பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | 15 07 92 | 1.30 — 3 00 பி.ப |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 17 07 92 | 1.30 — 3.00 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 21.07.92 | 1.30 — 3.00 பி.ப |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | | |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

07032

★ தரைமார்க்கமாக உணவு வரமுடியாத நிலை

# மேலதிக கப்பல்கள் மூலம் உணவுப்பொருள் வரவேண்டும்

யாழ் குடாநாட்டுக்கென உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்த பல லொறிகள் கிளிநொச்சிப்பகுதியில் தரித்து நிற்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்

தற்போதைய நிலையில் யாழ் மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் உணவுப்பொருள்களை தரைமார்க்கமாக எடுத்து வர முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனால் கப்பல்கள் மூலம் உணவுப்பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு இந்நிறுவனங்கள் கொழும்பிலுள்ள தமது தலைமையகத்தைக் கேட்டுள்ளன

இந்த உணவுப்பொருள்கள் வந்தால் தான் யாழ் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை பராமரிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதே வேளை தற்போது மாதம் ஒரு தடவை குமணக் கப்பலில் உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள் வருவதும் குடாநாட்டின் தேவைக்கு போதாது என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

இதனால் மீண்டும் விக்லி லி. குமாரி கப்பல்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் உணவுத் தட்டுப்பாட்டை நீக்க முடியும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. 47

★ காங்கேசன் களஞ்சியத்தில் உள்ள

## உணவுப் பொருள்கள் தீவுப்பகுதிக்கு அனுப்பப்படும்

காங்கேசன்துறை களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருள்களை சிறிய கப்பல்களில் இராணுவத்தினர் தீவுப்பகுதிக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இந்த உணவுப் பொருள்கள் யாழ் குடாநாட்டுக்கு என கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டவை

ஆனால் வலி வடக்கு பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையால் கீரிமலை - சேந்தான்குள வீதியூடாக சென்ற வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது

இதனாலேயே இந்த களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருள்களை இராணுவம் தீவுப்பகுதிக்கு கொண்டு செல்லவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47

## ஆரம்ப ஆசிரியர் பரீட்சை இன்று நடைபெறும்

ஆரம்ப ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை இன்று திட்டமிட்டபடி நடைபெறும் என யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இதற்காக பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன

பரீட்சை நேரத்துக்கு முன்பாகவே பரீட்சார்த்திகள் மண்டபங்களுக்குச் சமுகம் தரவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 47

## யாழ். அரச அதிபர் கொழும்பு பயணமாவார்

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குமணக்கப்பலில் திருகோணமலை சென்று அங்கிருந்து வாகன மூலம் கொழும்பு பயணமாவார்.

யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலையில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினை மண்ணெண்ணெயை அதிகமாக கப்பலில் அனுப்பிவைப்பது குறித்தும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் எனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## சித்திரபாடக் கழகம் புதிதாக அங்குரார்ப்பணம்

சித்திர பாடக்கழகம் ஒன்று யாழ். மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தில் சித்திர பாடத்தை விருத்திசெய்வதற்கு இக்கழகம் உதவுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பரீட்சைகளில் சித்திர பாடத்தில் யாழ்.மாவட்ட பெறுபேறுகள் பின்தங்கிய நிலையிலிருப்பது சுட்டிக்காட்டப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது 49

## ஆடிவேல் தவில் கச்சேரி புதனன்று வானொலியில்

கொழும்பில் நடைபெறவுள்ள ஆடிவேல் விழாவில் தவில் வாசிப்பதற்கென காஞ்சி காமகோடிபீட ஆஸ்தான வித்துவான் கலைமாமணி கே. கணேசபிள்ளை கொழும்பு வந்துள்ளார்.

இவரின் தவில் கச்சேரி புதன் கிழமை இடம் பெறவுள்ளது இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையிலும் இது அஞ்சல் செய்யப்படவுள்ளது.

## 950 பரீட்சை நிலையங்களில் இன்று போட்டிப் பரீட்சை!

ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இன்று சனிக்கிழமை நாடு முழுவதிலும் நடைபெறவுள்ளது

நாடு முழுவதிலும் 950 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு ஒரு இலட்சத்து 44 ஆயிரம் விண்ணப்பதாரிகள் தோற்றவுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் 41 பரீட்சை மண்டபங்களில் இந்த ஆரம்ப ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

## மகாராஜா ஒளிபரப்பு ஆகஸ்ட் 15 முதல் ஆரம்பம்

ஆகஸ்ட் 15 ஆம் திகதியிலிருந்து இலங்கையின் மூன்றாவது தொலைக்காட்சியான 'மகாராஜா தொலைக்காட்சிச் சேவை' அதன் ஒளிபரப்பை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த 'எம்.ரி.வி' மிகச் சக்தி வாய்ந்த ஒளிபரப்பியொன்றினூடாக தனது ஒளிபரப்பை மேற்கொள்ளவுள்ளது

நுவரெலியாவின் கடல்மட்டத்திலிருந்து 7300 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சக்தி வாய்ந்த ஒளிபரப்பு நிலையம் அடுத்த மாதம் முற்பகுதியிலிருந்து செயற்படவுள்ளது

இப்பொழுது 'எம்.ரி.வி.' சேவை மேல் மாகாணத்தில் 20 மைல் சுற்றளவுக்கு மட்டும் பரீட்சார்த்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆகஸ்ட் 15 ஆம் திகதியிலிருந்து வடக்குக் கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் இதன் ஒளிபரப்பை பார்க்கக்கூடியதாகவிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### கோவை மகேசன் நினைவஞ்சலி

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் கோவை மகேசன் நினைவஞ்சலிக்கூட்டம் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் க. வேவர் தலைமையில் இன்று பிற்பகல் 5 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விமானப்படை...

காணப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

வை - 8 விமானத்தில் இருந்த விமானப்படையினரின் சடலங்கள் ஏதும் படையினரால் மீட்கப்பட்டு கொழும்பு செல்லவில்லை என்பதால் கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் இப்படியான ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கலாம் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்

வளலாய்...

செங்கதிர் (வ. சின்னதம்பி உடுத்துறை) லெப். சுடரொளி (ஜ. ரமேஷ் பருத்தித்துறை) இந்திரன் (மயிலவாகனம், சந்திரன் அரியாலை) நாவலன் (முனியாண்டி, குமாரி கிளிநொச்சி) ஆகிய நான்கு போராளிகள் வீரச்சாவு எய்தினர். 24

கந்தளாயில—

விகளின் 31 ஆம் நாள் நினைவாக இத்தாக்குதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது

இராணுவம் தனது கட்டுப்பாட்டு பகுதி எனக்கூறிக்கொள்ளும் இடங்களில் கூட புலிகள் இத்தகைய தாக்குதல்களை மேற்கொள்ளும் திறமை கொண்டுள்ளனர் என்பது இத்தாக்குதல் மூலம் தெரியவருகிறது என பி. பி. ஸி இத்தாக்குதல் குறித்த தனது விமர்சனத்தில் குறிப்பிட்டது

சிதம்பரம்...

ஆம் மாத பிற்பகுதியில் தமிழரான ஜனாதிபதி வெங்கட்ராமனும் பதவி விலகுவதால் மத்தியில் தமிழகத்தின் பலம் மேலும் குறைவடையும் என்பதும் குறிப்பிடத்தக்கது

எது எவ்வாறாயினும் இந்திய மத்திய அமைச்சரவையில் தமிழ் நாட்டின் அரைகுறைப் பலமும் குறைந்துள்ளதைக் கணிக்கவேண்டும் இந்திய தேசியம் என்ற மாயையில் இன்னும் சிக்கித் தவிக்கும் கதர்சட்டைகாரங் கிரஸ்காரரும், கரைவேட்டி அ. தி. மு. கழகக் காரர்களும் இதை உணரவேண்டும்,

## மக்கள் அஞ்சலிக்கு

மேஜர் அசோகனின் புகழுடல் யாழ் மாவட்டத்தின்வலிகாமம் பகுதியிலுள்ள வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், மானிப்பாய், யாழ்ப்பாணம், அரியாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளிலும்

தென்மராட்சி பிரிவில் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளிலும் வடமராட்சி பிரிவில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 'வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலுள்ள புனித புதைகுழியில் விதைக்கப்படும்

கலைக்கோன் இந்திரன் ஆகிய இருவரது புகழுடல்களும் வலிகாமம் பிரிவில் மேஜர் அசோகன் அவர்களது புகழுடல் வைக்கப்படும் இடங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலுள்ள புனித புதை குழியில் விதைக்கப்படும்.

## சிறந்த பெண்மணிக்கான விருது தீபிகாவுக்கும் கிடைத்தது

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய பெண்களுக்கு விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்டது

பத்திரிகை வாசகர்கள் மத்தியில் நடத்தப்பட்ட அபிப்பிராயக் கணிப்பின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

விளையாட்டுத்துறையில் சிறந்த பெண்மணிக்கான விருது தீபிகா சண்முகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது

## பதுளை இரவு ரயில் சேவை மீண்டும் நிறுத்தம்

பதுளை - கோட்டை இரவு ரயில் சேவைகள் மீண்டும் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன

கலகொடவுக்கும் வட்டவளைக்கும் இடையேயுள்ள ரயில் பாதை மீண்டும் புதைந்து போயுள்ளதனாலேயே ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் பொடிமெனிக்கே, உடரட்ட மெனிக்கே ஆகியவை நாவலப்பிட்டி வரை நடத்தப்படுகின்றன. ஹட்டனிலிருந்து இவற்றுக்கு இணைப்பு சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## கல்முனைப் பகுதியிலிருந்து அதிகாலைவேளையில் தாக்குதல்

பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

காலை 6 30 மணியளவில் கல்முனையை அண்டிய பகுதியை ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டுத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. 47

### இறுதிப் பணியாம்

பலவேகய படையினர் இயக்கச்சி பகுதியில் தமது இறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனராம், இத்தகவலை கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

### வடமராட்சியிலும் மக்கள் அஞ்சலி

நேற்று முன்தினம் இயக்கச்சிப்பகுதி நேரடி மோதலில் வீரச்சாவு எய்திய வடமராட்சி பகுதி வேங்கைகளின் புகழுடம்புகளும் இடைக்காட்டுப் பகுதி காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவு எய்திய வேங்கைகளின் புகழுடம்புகளும் வடமராட்சியின் பல்வேறு இடங்களில் நேற்று மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன

பின்னர் புகழுடம்புகள் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன 24

### கடற்படை கப்பல் பீரங்கித்தாக்குதல்

தாழையடியில் நேற்று முன்தினம் பாரிய கடற்படைக் கப்பல் திடீரென பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டதில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் மாலை 5 மணியளவில் நடைபெற்றது. இக்கடற்படைக்கப்பல் வடமராட்சி கிழக்கின் பல பாகங்களிலும் இடையிடையே தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. 24

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 11-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது